பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 21 சனிக்கிழமை 05.07.2025 கதிர் 238

### இது ரகசியம் அல்ல!

முன்னாள் அமைச்சர்கள் இருவர் ஓரிரு தினங்களில் கைது செய்யப்படவுள்ளனர் என்பதை சட்டமா அதிபர் திணைக்களவட்டாரங்களின் ☞ 2

# கொள்கலன் விவகாரத்தில் அதிகாரிகளை குற்றவாளிகளாக்க ஆளும்தரப்பு முயற்சி

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

பரிசோதனையின்றி கொள்கலன் விடுவிப்புவிவகாரத்தில்ஆளும்தரப்புக்கு நெருக்கமான நபரை பாதுகாப்பதற்கு அரசஅதிகாரிகளைகுற்றவாளிகளாக்கும் செயற்பாடுகள்தற்போது ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது. அரச நிர்வாகத்தை பலவீனப்படுத்தும்வகையில்ஆளும்தரப்பு செயற்படுகிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் அடிப்படை பிரச்சினைகளை மூடி மறைத்து சர்வாதிகாரமான முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும்நிலையில் ஆளும்தரப்பு உள்ளது. அனைத்து கட்டமைப்புக்களிலும். தற்போது அடக்குமுறைகள் தீவிரமடைந்துள்ளன. ☞ 2

# அதிகாரிகளின் தவறுகள் மீது நாணய நிதியத்தின் கவனம்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதி (Extended Fund Facility) திட்டத்தின் கீழ் இலங்கை மேற்கொண்ட கடமைகளை மீறியமை மற்றும் இலங்கை அதிகாரிகளால் தவறான தகவல்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தியுள்ளது. ☞ 6

# இஸ்ரேலுக்கு எதிர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் 8 மாதங்களாகத் தடுப்பில்

## ஆளும்தரப்பு இரட்டைவேடம் என முஜிபுர் எம்.பி. குற்றச்சாட்டு

இஸ்ரேலுக்கு எதிரான வாசகங்களை தொலைபேசியில் வைத்திருந்த குற்றத்துக்காக மாவனெல்லையை சேர்ந்த 21வயதுடைய இளைஞன்சுஹைல்பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடந்த 8 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். ஆளும்தரப்பு இஸ்ரேல் பலஸ்தீன் விவகாரத்தில் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகிறது என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். ☞ 6

# சிந்துப்பாத்தியில் ஏ-9 வீதியையொட்டியும் மனிதப் புதைகுழி இருக்கும் சாத்தியங்கள்

## யாழ். சட்டத்தரணிகள் சங்க பிரதிநிதி தகவல்



யாழ். அரியாலை - செம்மணி - சிந்துபாத்தி மனித புதைகுழியிலிருந்து இதுவரை 37 எலும்புக்கூடுகள்மீட்கப்பட்டுள்ளன. இந்தநிலையில்,தற்போதுஅகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் ☞ 2

# நீண்ட கால பொருளாதார உறுதிப்பாட்டை இலங்கை அடைய உதவுவதற்குத் தயார்

## ஜப்பான் அறிவிப்பு

நிதியியல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள், சமூகத்தின் மீண்டெழும் தன்மையை மேம்படுத்தல் மற்றும் அமைதி, ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் ஆகிய மூன்றுபிரதானகூறுகளின்ஊடாகஇலங்கையின் பொருளாதார மீட்சிக்கும், நீண்டகால அடிப்படையிலான ஸ்திரத்தன்மைக்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக ☞ 2

# சொற்ப அளவில் பேருந்து கட்டணம் இன்று முதல் குறைப்பு

குறைக்கப்பட்ட பேருந்துகட்டணம்இன்று(04) முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ஆரம்பக் கட்டணமான 27 ரூபாவில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

2ஆவது கட்டணமான 35 ரூபா மற்றும் 3ஆவது கட்டணமான 45 ரூபா ஆகியவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏனைய பேருந்து கட்டண படிமுறைகளுக்கமைய 01 ரூபா, 02 ரூபா, 03 ரூபா மற்றும் 04 ரூபா அளவில் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அதிகபட்ச பேருந்து கட்டணமான ☞ 6

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் இனி சட்ட நடவடிக்கை

## அரச கட்டமைப்புக்களின் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் தொடர்பில் மேன்முறையீடு செய்யும் முறையொன்று இல்லாததன் காரணமாக, மேன்முறையீடுகளை முன்வைத்து அப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு சட்டரீதியில் வாய்ப்பு எதுவும் இல்லை எனவும், அவ்வாறு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சகல அரச கட்டமைப்புக்களினதும் அதிகாரிகளுக்கு இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழுஅறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், ☞ 2

# அமைச்சரவையை சீரமைக்கவேண்டும்

## பொதுஜன பெரமுன எம்.பி. வலியுறுத்து

தேசிய பாதுகாப்பு தொடர்பில் அடிப்படை தகைமையற்றவர்களை அரசுத்தலைவர் பதவி நீக்க வேண்டும்.அதேபோன்று அமைச்சரவையையும் சீரமைக்க வேண்டும். வாய்ச்சொல் வீரர்களை வைத்துக் கொண்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களுக்கு பாடம் கற்பிப்பதாக குறிப்பிட்ட பாதுகாப்பு பிரதி அமைச்சரை தற்போது தேடிக் ☞ 6

# வாக்குமூலம் பெற அழைப்பதற்கான காரணத்தை பொலிஸ் கூறவேண்டும்

## தெளிவுபடுத்தி சுற்றறிக்கை வெளியீடு

ஏதேனும்முறைப்பாடுதொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக நபர் ஒருவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கும் போது முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி குறித்த நபருக்கு தெளிவுபடுத்த வேண்டிய விதம் தொடர்பில் வழிகாட்டுதல்களை வழங்கும் சுற்றிக்கை ஒன்று பதில் பொலிஸ் மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த சுற்றுநிருபங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும்அனுப்பப்பட்டுள்ளதாக ☞ 6

### அமெரிக்காவின் வரி விவகாரம்

# வியட்நாமால் முடிந்தது இலங்கையால் முடியுமா?

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. கேள்வி

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 46 சதவீத தீர்வை வரி விதிப்பை வியட்நாம் பேச்சு ஊடாக 20 சதவீதமாக குறைத்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தை வியட்நாம்இவ்வாரம்கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை வியட்நாம் நாட்டை காட்டிலும் முன்னேற்றத்தன்மையடைந்துள்ளதா, தீர்வை வரி தொடர்பிலான பேச்சின் முன்னேற்றத்தை வெளிப்படுத்துவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுவது அவர்களின் பல கதைகளில் ஒன்றாக மாறிவிட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தகவல்களுடன் வியாழக்கிழமையே தெரிவித்திருந்தேன். அதேபோன்று நேற்று முன்னாள் அமைச்சர் சந்திரசேன கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு நிவாரண விலையில் பெற்றுக் கொடுப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட25மில்லியன்ரூபாபெறுமதியான சோள விதைகளை தமது நெருங்கிய தரப்பினர் மூலம் பகிர்ந்தளித்து அரசியல் இலாபத்தை அடைய முயற்சித்தார் என்று தெரிவித்து முன்னாள் அமைச்சர் சந்திரசேன இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நேற்று கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்று ஆணைக்குழுவிற்கு வந்து வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் விசாரணை அதிகாரிகளால் இவ்வாறு அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதற்கமைய சந்தேகநபர் நேற்று பிற்பகல் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

2014 ஆம் ஆண்டு அனுராதபுர மாவட்டத்தின் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு நிவாரண விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக 25 மில்லியன் ரூபா சோள விதைகள் அப்போதைய ஆளும்தரப்பினால் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் இலாபத்தை அடைவதற்காக அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளை அச்சுறுத்தி தமது நெருங்கிய தரப்பினரால் மூலம் அவற்றை அமைச்சர் விவசாயிகளுக்குப் பகிரந்தளித்தார் என்பது தெரியவந்ததை அடுத்தே முன்னாள் அமைச்சர்கைதுசெய்யப்பட்டார். இதன்மூலம் ஆளும்தரப்புக்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என்பது குற்றஞ்சாட்டு.

அமைச்சர் தவிர மற்றொரு சம்பவத்தில் வேறு இரு பணியாளர்களும் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நேற்றுக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். பேராதனை பூச்சிக்கொல்லிகள் பதிவாளர் அலுவலகத்தின் ஓர்அதிகாரிமற்றும்ஒருசாரதிஆகியோரேகைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ரூ. 10,000 லஞ்சம் பெற்றபோது கைது செய்யப்பட்டதாக லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் தெரிவித்துள்ளது. பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் அளித்த புகாரைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள் மற்றும் தாவர வளர்ச்சி ஹார்மோன்கள் தயாரிக்கும் தொழிலைப் பதிவு செய்வதற்கும் உற்பத்தி செய்யப்படும் பூச்சிக்கொல்லிகளின்மாதிரிகளைஎடுப்பதற்கும் அதிகாரிகள் வந்த வாகனத்திற்கு எரிபொருள் வாங்குவதற்காகவெனஅந்தத்தொழிலதிபரிடம் லஞ்சம் கேட்டுள்ளார்களாம் இந்த இருவரும். லஞ்சம் பணத்தைப் பெற்றுக்கொள்ள தொழிலதிபரின் வீட்டிற்குச் சென்றிருந்த சமயமே இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று ஆணையம் கூறுகிறது.

இப்படி லஞ்ச ஒழிப்பில் ஆளும்தரப்பு தீவிரம் காட்டுவது எல்லாம் நல்லதுதான், சரியானதுதான். ஆனால், இப்படிக் கைது செய்யப்படுபவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள்எல்லாம்சிறுதொகைகளைக் கொண்டவையாகவே இருக்கின்றன. ஆனால் என்பிபி எதிர்க்கட்சியாக இருந்தபோது பல நூறு மில்லியன் கணக்கில் மோசடிகள் இடம்பெற்றமைகுறித்தேநாடாளுமன்றத்திலும் வெளியிலும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவும் இல்லை. அதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகளும் நடக்கவில்லை. குறிப்பாக சீன ஊழல், மத்திய வங்கி பிணை முறி ஊழல் போன்றவற்றின் மீதும் கம்போடியாவில் முதலீடு தொடர்பிலும் எந்த விசாரணைகளுக்கும் அறிகுறிகளைக் காணமுடியவில்லை.

ஆளும்தரப்பின் இந்தப் போக்கு ஊசி போகும்இடங்களைப்பார்த்துவிட்டு, உலக்கை போகும்இடத்தைஅதுகோட்டைவிட்டுவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது. நெத்தலி மீன்களைப் பிடித்துவிட்டு திமிங்கலங்களைத் தப்ப விட்டுவிடாதீர்கள் சாமி!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிந்துப்பாத்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி - சிந்துபாத்தி மயானத்தின் 11 மு 11 சதுர அடி நிலபப்ரப்புக்கு மேலதிகமாக, ஏ- 9 வீதியை அண்மித்தும் சடலங்கள் இருக்கலாமென சந்தேகிப்பதாக யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது.

இந்த அகழ்வுப்பணிகளை கண்காணிக்க யாழ். சட்டத்தரணிகள் சங்கமும் நேற்று முதல் அகழ்வுப் பணி இடம்பெரும் பகுதிக்கு தனது சட்டத்தரணிகள் குழாமை அனுப்பியுள்ளது. யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் நேற்று வருகை தந்த சட்டத்தரணி மணிவண்ணன் இதனை தெரிவித்தார். அவசியம் ஏற்படின் மேலதிக நிலப்பரப்பின் அகழ்வு குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படலாம் என அவர் தெரிவித்தார்.

செம்மணி - சித்துபாத்தி மனிதப் புதை குழியின் அகழ்வுப் பணியின் 2 ஆம் கட்டத்தின் 9 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று யாழ் நீதிவான் ஆனந்த ராஜாவின் மேர்பார்வையில் நடந்தது. இதன்போது, தொல்பொருள் தடயவியல் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் உதவியுடன் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவனின் நேரடி கட்டுப்பாட்டில் இந்தஅகழ்வுப்பனிகள்முன்னெடுக்கப்பட்டன.

நேற்று மாலையாகும் போது மொத்தமாக 42 எலும்புக் கூடுகள் இந்த புதைக் குழி பகுதியில் அடையாலம் காணப்ப்ட்டிருந்த்த நிலையில் அதில் 37 மீட்கப்ப்ட்டிருந்த்தன.

இந்த நிலையில் மீட்கப்பட்ட எழும்புக் கூடுகள் இருந்த முறைமையை அவதனைக்கும்போது மிகத் திட்டமிட்டு, சடலங்கள் புதைக்கப்ப்ட்டிருப்பதையும், தடயங்கள்,திசைகண்டறியப்படுவதைதடுக்கும் வண்ணம்திட்டமிடப்பட்டுஇந்தநடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப்ட்டிருப்பதையும் அவதானிப்பதாகவும் யாழ். சட்டத்தரனிகள் சங்கத்தின்சார்பில்செய்தியாளர்களிடம்பேசிய சட்டத்தரணி மணிவண்ணன் குறிப்பிட்டார்.

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தலைவர்கள்,கூட்டுத்தாபனங்கள் மற்றும்நியதிச்சட்டசபைகளின்பிரதானிகளுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனியவினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க மனித உரிமைகள்ஆணைக்குழுச்சட்டத்தின்பிரகாரம் மேற்கொள்ளப்படும்விசாரணைகள்தொடர்பில் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அனைத்து பிரதிவாதி தரப்புக்களும் கடமைப்பட்டுள்ளனர்.

அதேவேளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் பொதுநிர்வாக சுற்றறிக்கை ஊடாக சகல அமைச்சுக்களின்செயலாளர்கள்,மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டசபைகளின் பிரதானிகள் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின்15(7)ஆம்பிரிவுக்கு அமைய பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் அப்பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதற்கு குறித்த நபரால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்தொடர்பில்ஆணைக்குழுவுக்கு அறிக்கைப்படுத்தவேண்டியகடப்பாடுஉண்டு எனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் ஆணைக்குழுவினால் பரிந்துரைகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் வினவும்போது, அதுகுறித்து மேன்முறையீடு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக அப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சில கட்டமைப்புக்கள் பதிலளித்துள்ளன.

இருப்பினும் மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் பரிந்துரைகள் தொடர்பில் மேன்முறையீடு செய்யும் முறையொன்று இல்லாததன் காரணமாக, மேன்முறையீடுகளை முன்வைத்து பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு சட்ட ரீதியில் வாய்ப்பு எதுவும் இல்லை என்பதை அனைத்துத் தரப்பினரும் அறிந்திருக்கவேண்டும்.

அதுமாத்திரமன்றி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்அமுல்படுத்தப்படாவிடின்,அதற்கு எதிராக ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குஅதனுடன்தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் கட்டமைப்புக்கள் பொறுப்பேற்கவேண்டும் என்பதையும் அறியத்தருகிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீண்ட கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பான் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான ஜப்பான் - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு கொள்கை கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை (4) கொழும்பிலுள்ள நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது. நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் ஜப்பர்ன வெளிவிவகார அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்புப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் இஷிசுகி ஹிடே ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஜப்பானின் நிதியுதவியுடன் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்திட்டங்கள் குறித்தும், எதிர்வருங்காலத்தில் இருநாடுகளுக்கும்இடையிலானபொருளாதார ஒத்துழைப்புக் கொள்கைகள் மற்றும் அபிவிருத்திவாய்ப்புக்கள்குறித்தும்விசேடமாக ஆராயப்பட்டது.

அதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட நிதியமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும, ஜப்பானிய அரசாங்கம் நீண்டகாலமாகஇலங்கைக்குவழங்கியவரும் தொடர்ச்சியானஒத்துழைப்புக்களுக்குத்தனது நன்றியை வெளிப்படுத்தினார். அத்தோடு ஈடுசெய்யமுடியாத ஜப்பானின் உதவிகள், ஆதரவு மற்றும் ஒத்துழைப்பினை இலங்கை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவுக்குஇணைத்தலைமைவகித்தநாடுஎன்ற ரீதியில்ஜப்பான் ஆற்றிய முக்கிய பங்களிப்பை இலங்கை அரசாங்கமும், மக்களும் சந்திகள் கடந்தும் நினைவில் வைத்திருப்பர். இலங்கையின் கடன்வழங்குனர்களுடனான பேச்சுவார்த்தைகளில் ஜப்பான் முக்கிய பங்காற்றியது. நெருக்கடிக்குரிய அக்காலப்பகுதியில் இலங்கையுடன் உடன்நின்றமைக்குநன்றி' எனவும்ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட இஷிசுகி ஹிடே, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின்முயற்சிகளைப்பாராட்டியதுடன் சர்வதேசநாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின்கீழானமறுசீரமைப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதை வரவேற்றார்.

மேலும் நிதியியல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள், சமூகத்தின் மீண்டெழும் தன்மையை மேம்படுத்தல் மற்றும் அமைதி, ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் ஆகிய மூன்று பிரதான கூறுகளின்ஊடாகஇலங்கையின்பொருளாதார மீட்சிக்கும், நீண்டகால அடிப்படையிலான ஸ்திரத்தன்மைக்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாக உத்தரவாதமளித்தார்.

## வியட்நாமால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புமாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் வியட்நாம் நாட்டை காட்டிலும் இலங்கை சிறந்த நிலையை எட்டியுள்ளதா,புதிய பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தன்மை குறித்து கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பிய போது, அதற்கு பதிலளித்த தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ,

'தீர்வைவரிசெயற்படுத்தலைஇடைநிறுத்தி வழங்கப்பட்ட காலவகாசம் எதிர்வரும் 09 ஆம் திகதியுடன் நிறைடைகின்ற நிலையில், இவ்விடயம் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட முதலாவது ஆசியநாடாகஇலங்கைகாணப்படுவதாகவும், இந்த பேச்சுவார்த்தையின் நேர்மறையான முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாகவும்' குறிப்பிட்டார்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட 46 சதவீத தீர்வை வரி விதிப்பை வியட்நாம் பேச்சுவார்த்தை ஊடாக 20 சதவீதமாக குறைத்துள்ளது.இதற்கான ஒப்பந்தத்தை வியட்நாம் இவ்வாரம் கைச்சாத்திட்டுள்ளது.இலங்கைவியட்நாமைநாட்டிலும் முன்னேற்றத்தன்மையடைந்துள்ளதா,

இந்த நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வந்த போது நிராகரிக்கப்பட்டோம்.அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மற்றும் அவர் தலைமையிலான ஆளும்தரப்பு என்ன செய்கிறது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியவில்லை.பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி, வலுவான பொருளாதார வளர்ச்சியை அடைவதாகவும் அரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

பரஸ்பரதீர்வைவரிகுறித்துஅமெரிக்காவுடன் முன்னெடுக்கும் பேச்சுவார்த்தை தொடர்பில் அமெரிக்கா- இலங்கை கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதாக ஆளும்தரப்பு குறிப்பிட்டது. ஆனால் இதுவரையில் எவ்வித கூட்டறிக்கையும் வெளியிடப்படவில்லை. இது ஆளும்தரப்பின் கதைகளில் ஒன்றாக மாறிவிட்டது என்றார்.

## கொள்கலன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் ராஜபக்சர்கள் திருடர்கள் என்றார்கள், பின்னர் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என்றார்கள்.தற்போது அரச அதிகாரிகள் திருடர்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.அரச நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரச நிர்வாகத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

சுங்கத்தில் பரிசோதனையின்றி கொள்கலன்கள்விடுவிக்கப்பட்டமைதொடர்பில் உண்மையை ஆளும்தரப்பு இதுவரையில் வெளிப்படுத்தவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தற்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொள்கலன்விவகாரத்தில்ஆளும்தரப்புக்கு நெருக்கமானநபரைபாதுகாத்துக்கொள்வதற்கு அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் செயற்பாடுகள் தற்போது ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது.

நாட்டில் நாளாந்தம் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இயல்பாகி விட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்ஸ்தானிகரை அழைத்து வந்து பழைய புதைகுழிகளை தோண்டுவதை விடுத்து, மக்களின் பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும். தேசிய பாதுகாப்புபற்றிபேசுபவர்களைஇனவாதிகளாக சித்தரிக்கும்போக்கு காணப்படுகிறது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலத்திரனியல் வணிக்கக் கொள்கை உருவாக்கத்தை தாமதிக்கக்கூடாது

## நாமல் ராஜபக்ச வலியுறுத்து

செயற்திறன்மிக்க இலத்திரனியல் வணிகக் கொள்கையைஉருவாக்குவதைஇலங்கைஇனிமேலும் தாமதப்படுத்தக்கூடாது. நவீன இலத்திரனியல் வணிகக் கொள்கை என்பது ஆடம்பரமானதொரு விடயமல்ல. மாறாக அது வேலைவாய்ப்பு உருவாக்கம், புத்தாக்கம், உலகளாவிய போட்டிக்கு ஈடுகொடுத்தல் என்பவற்றுக்கான அடிப்படையாகும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து நாமல் ராஜபக்ச அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

செயற்திறன்மிக்க இலத்திரனியல் வணிகக் கொள்கையை உருவாக்குவதை இலங்கை இனிமேலும் தாமதப்படுத்தக்கூடாது. மாறாக உலகளாவிய யதார்த்தங்களையும், உள்நாட்டு இலக்குகளையும் பிரதிபலிக்கக்கூடியவாறு, எதிர்காலத்தை சிறந்தமுறையில் கட்டமைக்கக்கூடிய செயற்திட்டமொன்றைஉருவாக்குவதைமுன்னிறுத்தி தனியார்துறையினர், டிஜிட்டல் தளங்கள், ஏனைய தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவோர் உள்ளிட்ட சகல தரப்பினருடனும் ஒன்றிணைந்து பணியாற்றவேண்டும்.

குறிப்பாக வணிகங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான இலத்திரனியல் கொடுக்கல், வாங்கல்களுக்கான செயன்முறையை இலகுபடுத்தல் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும் இடையூறாக அமையக்கூடிய தடைகளை அடையாளங்கண்டு, அவை நீக்கப்பட்ட கொள்கையையே உருவாக்கவேண்டும். இது வெறுமனே வர்த்தகத்துடன் மாத்திரம் தொடர்புடைய விடயமல்ல. மாறாக உள்ளூர் புதிய முயற்சியாண்மைகள், சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள், டிஜிட்டல் புத்தாக்க உருவாக்குனர்கள் உள்ளடங்கலாக கீழ்மட்டத்தில் இருந்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோருக்கான புதிய வாய்ப்புக்களின் திறவுகோலாகவும் இது அமையும்.

இலங்கையின் டிஜிட்டல் ஏற்றுமதிகள் மற்றும் இலத்திரனியல் வணிகம் மூலமான நுகர்வுக்கோரிக்கைகள் என்பன தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்றன. எனவே இப்போது இலத்திரனியல் வணிகக் கொள்கையை உருவாக்குவதற்குத் தவறுவோமாயின், முன்னேறிச்செல்லும் உலகில் நாம் பின்தள்ளப்படக்கூடிய அச்சுறுத்தல் உள்ளது. நவீனமான இலத்திரனியல் வணிகக் கொள்கை என்பது ஆடம்பரமானதொரு விடயமல்ல. மாறாக அது வேலைவாய்ப்பு உருவாக்கம், புத்தாக்கம், உலகளாவிய போட்டிக்கு ஈடுகொடுத்தல் என்பவற்றுக்கான அடிப்படையாகும் என அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தொடருந்து சமிக்ஞையில் திடீர் கோளாறு பெரு விபத்து ஊழியர் செயலால் தவிர்ப்பு

சிலாபத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப்பயணித்த தொடருந்து (810), ராகமை புகையிரத நிலையத்துக்கருகில் வருகைத்தந்து கொண்டிருந்த சமயத்தில் தொடருந்து கட்டுப்பாட்டு சமிக்ஞையில் கோளாறு ஏற்பட்டுள்ளதுடன் தொடருந்து கட்டுபாட்டாளர் சுதாகரித்துக் கொண்டமையால் ஏற்படவிருந்த பெரும் விபத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தொடருந்து வேக்கக கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் செயலாளர் துமிந்த பிரசாத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) சிலாபத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த 810 என்ற தொடருந்து, ராகமை புகையிரத நிலையத்துக்கருகில் வருகைத்தந்து கொண்டிருந்த சமயத்தில் தொடருந்து கட்டுப்பாட்டு சமிக்ஞையில் கோளாறு ஏற்பட்டுள்ளது. தக்க சமயத்தில் சுதாகரித்துக் கொண்ட தொடருந்து கட்டுபாட்டாளர் சமிக்ஞையில் கோளாறு தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அதேபோல் அண்மையில் மொரட்டுவை பகுதியிலும் இதேபோல் சமிக்ஞையில் கோளாறு ஏற்பட்டது. தொடருந்து தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசல் காரணமாக தொடருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அதே பாதையில் எதிர் திசையிலிருந்து பிறிதொரு தொடருந்து வருகை தந்திருந்திருந்தது. இவ்வாறான சமிக்ஞை கோளாறால் பெரும் விபத்துக்கள் ஏற்படலாம். தொடருந்துவே பொதுமுகாமையாளர் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் உடனடியாக இது தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்றார்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செம்மணியில் பணிகளை விரைவுபடுத்தவேண்டிய அவசியம்

**யாழ்ப்பாணம் செம்மணியில் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் சிந்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள், தமிழர் இனப்படுகொலைக்குநீதிதேடும்பயணத்தில் ஒரு முக்கியப் பகுதியாகவே பார்க்கப்படுகின்றன. கடந்த காலத்திலேயே இந்தச் சூழலில் 15 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அகழ்வு நடைபெறும் இடங்களில் மனித எச்சங்கள் தொடர்ந்து கண்டு பிடிக்கப்படுவதாக அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரையில் 42 எலும்புக்கூடுகள் அங்கு அடையாளப்படுத்தப்பட்டு அவற்றில் 37 மீட்கப்பட்டும் உள்ளன. இதனையடுத்து, தோண்டப்படவேண்டிய தொகுதிகள் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய நிலை ஏற்பட்டு வருகின்றது.**

**ஏற்கனவேஅடையாளப்படுத்தப்பட்டநான்குதொகுதிகளுக்கு மேற்பட்ட ஐந்தாவது பகுதியும் ஏ–9 வீதியின் பக்கமாக இருக்கக்கூடும் என யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதியாக அந்த இடத்திற்கு நேற்று வருகை தந்திருந்த சட்டத்தரணி மணிவண்ணன் கூறியிருப்பது, இந்த மனிதப் புதைகுழி தனிப்பட்ட சம்பவம் அல்ல என்பதையும், அதனைச் சுற்றி இன்னும் பல புதைகுழிகள் விரிவாகக்கூடிய சாத்தியங்களையும் உணர்த்துகின்றது.**

**இவ்வாறான நிலைமையில் அகழ்வுப் பணிகள் மெதுவாக முன்னேறுவதோடு, இன்னும் இரண்டு மாதங்களில் வடக்கு–கிழக்கு பகுதிகளில் பருவமழை தொடங்கும் என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாக இருக்கின்றது. மழை தொடங்கிய பிறகு, மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர்த்தேக்க நிலை காரணமாக அகழ்வுப் பணிகளை நிறுத்த வேண்டிய சூழல் உருவாகலாம். இது, இப்போதுள்ள தடயங்களையும் சான்றுகளையும் அழித்து விடக் கூடும்.**

**இவ்வளவு முக்கியமான பணி இடம்பெறும்போது, அதற்கான மனிதவள ஆதாரங்கள், தொழில்நுட்ப வசதிகள் ஆகியவை குறைவாக உள்ளன என்பது நிதர்சனமான உண்மை. இந்த பணி வெறும் ஒரு அரசு நிர்வாகத் துறையின் அடிப்படையான கடமை அல்ல. இது ஒரு இனத்தின்மேல் நிகழ்ந்த பெருந்துயரங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவேண்டிய நீதிப் பயணமாகும்.**

**ஆகையால், சிந்துப்பாத்தி அகழ்வுப் பணிகளை விரைவுபடுத்தவேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்காக, அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் வல்லுநர்களின் எண்ணிக்கையைஅதிகரித்தல், உயர்தொழில்நுட்பஸ்கேனிங் கருவிகளை கொண்டு புதைகுழிகள் இருக்கக்கூடிய இடங்களை சீராகத் தேர்வு செய்தல், மண் ஊடுருவும் ரேடார் மற்றும் 3ம் ஸ்கேன் முறைகளை பயன்படுத்துதல், மேலதிக பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் ஆகியவை அவசியமாகின்றன.**

**மேலும், சிந்துப்பாத்தியில் மட்டுமல்லாது, செம்மணி, அரியாலை, கொழும்புத்துறை போன்ற பகுதிகளிலும் மண்ணின் கீழ் மறைந்திருக்கும் மனித எச்சங்களை அடையாளப்படுத்தும் பணி விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.**

**இரண்டுமாதங்கள்என்றஇந்தக் குறுகிய காலப்பகுதியில், அதிகபட்சமான தகவல்களைத் திரட்டுவது, பிற்காலம் வரையிலும் நீதி தேட முடியுமாறு ஆதாரங்களை பாதுகாப்பது என்பது மிக முக்கியமான பணி. இந்தச் சூழ்நிலையில் பணிகளை மெதுவாக்குவது அல்லது காலம் சென்றபிறகு செயற்படுவது, மீண்டும் ஒரு வரலாற்றுப் பிழையாகும்.**

**அதனால், இந்நேரம் திட்டமிட்டு, நேரத்தை உணர்ந்து, செயல்திறன் மிக்க முறையில் செயல்படுவதற்கான அரசுத் தீர்மானம் அவசியமாக உள்ளது. இதுவே கடந்த காலங்களில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதியின் முதல் படியாக அமையும்.**

# போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையருக்கு பிணை

அனுமதிப்பத்திரம்பெற்றுக்கொள்வதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்துக்கு வருகை தந்தவர்களிடம் இலஞ்சமாகப் பெறப்பட்டதாக கூறப்படும் 41 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியான பணத்தை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அந்த திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி கிளையின் பிரதி ஆணையாளர் உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் நேற்றையதினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கமைய சந்தேகநபர்களை தலா 2 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணைகளிலும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணைகளிலும் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயசுந்தர உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் சந்தேக நபர்களுக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை மற்றும் அவர்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குள் பிரவேசிக்கவும் இடைக்காலத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது

இதன்போது மன்றில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் விடயங்களை முன்வைத்து

இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும்விசாரணைகளுக்கு அமைய மோட்டார் வாகன திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சிசிரிவி காட்சிகள் அடங்கிய ம்ாயூ இயந்திரம் மேலதிக விசாரணைகளுக்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் மே மாதம் 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ம்ாயூ இல் இருந்த தரவுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பில் சில நிதி நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக குறிப்பிட்டனர்.

எவ்வாறாயினும் பிரதிவாதிகள் தரப்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் தமது சேவை பெறுநர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

முன்வைக்கப்பட்ட இருதரப்புவாதங்களை கருத்திற்கொண்ட நீதவான் தனுஜா லக்மாலி சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். இதற்கமைய இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு வருகை தந்தவர்களிடம்

இலஞ்சமாகப் பெறப்பட்டதாக கூறப்படும் 41 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான பணத்தை தம்வசம் வைத்திருந்த

குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அந்த திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி கிளையின் பிரதி ஆணையாளர் உள்ளிட்ட 3 சந்தேகநபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு பிடியாணை உத்தரவுடன் நாரஹேன்பிட்டி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் அண்மையில் சுற்றிவளைப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது அங்கிருந்து 41 இலட்சத்து 17 ஆயிரத்து 340 ரூபா பணம் மீட்கப்பட்டது.

வாகன உரிமை மாற்றும் பிரிவின் பிரதி ஆணையாளரின் அலுவலகத்தில் இருந்து மீட்கப்பட்ட குறித்த பணம் தொடர்பில் அவர்களால் தெளிவுப்படுத்த முடியாமையால் அவை இலஞ்சத்தின் ஊடாக பெற்றுக்கொண்டதாக கருதப்பட்டு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் அந்த திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்

# 913 கி. கேரள கஞ்சாவுடன் இரு சந்தேகநபர்கள் கைது

வென்னப்புவ பகுதியில் சுமார் 913 கிலோ கிராம் எடையுடைய கேரள கஞ்சா மற்றும் 2 கைத்துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு உதவிய மற்றுமொரு சந்தேகநபரும் பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வியாழக்கிழமை( 3) கடற்படை புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகள் குழுவினர் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன்போது 913 கிலோ 124 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மேலும்சந்தேகநபர்களிடமிருந்து வெளிநாட்டில்உற்பத்திசெய்யப்பட்ட 2கைதுப்பாக்கிகள், 40 துப்பாக்கி தோட்டாக்கள், கெப் ரக வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு சந்தேகநபர்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டின் பேரில் மற்றுமொரு சந்தேகநபரும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர்கள் 24, 48 மற்றும் 51 வயதுடைய நொச்சியாகம, உலுக்குளம், அனுராதபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாரவில நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை 7 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்துள்ளது. அதற்கமைய பொலிஸ் போதைப்பொருள் பணியகம் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு வேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு வேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு வேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## அதிகாரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், இந்த தவறான தகவல்கள் வழங்கப்பட்டமை இலங்கை அதிகாரிகளால் வேண்டுமென்றே செய்யப்படவில்லை என்று கூறும் நாணய நிதியம், இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் கலந்துரையாடலுக்கு பின்னர், துணை முகாமைத்துவப் பணிப்பாளரும் தற்காலிக தலைவருமான கென்ஜி ஒகமுரா வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'விரிவான கடன் வசதி திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இணங்காத கொள்முதல் மற்றும் நாணய நிதியத்தின் 8ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின் கீழ் கடமைகளை மீறியமை ஆகியவை சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டன.

விரிவான கடன் வசதி திட்டத்தின் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மறுஆய்வுகளின் போது செலுத்தப்படாத செலவுகள் தொடர்பாக அதிகாரிகளால் வழங்கப்பட்ட தவறான தகவல்களின் விளைவாக ஒப்பந்தங்களுக்கு இணங்காத கொள்முதல் நடைபெற்றது.

நாணய நிதியத்திற்குத் தவறான தகவல்கள் வழங்கப்பட்டமை வேண்டுமென்றே நடைபெறவில்லை. இதற்கு காரணம், நிதி அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களால் செலுத்தப்படாத தொகைகள் குறித்து உரிய நேரத்தில் அறிக்கையிடப்படாத பலவீனங்கள் மற்றும் தொழில்நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் செலுத்தப்படாத தொகைகள் என்பதன் வரையறை தொடர்பாக அதிகாரிகளின் தவறான புரிதல் ஆகும்.

அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள், அதாவது, செலுத்தப்படாத தொகைகளை தற்போதைய நிதி கட்டமைப்பிற்குள் திருப்பிச் செலுத்துதல், மற்றும் எதிர்காலத்தில் செலுத்தப்படாத தொகைகள் குவிவதையோ அல்லது தவறான தகவல்கள் அறிக்கையிடப்படுவதையோ தவிர்க்க, புதிய பொது நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கு இணங்க பொது நிதி முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான அதிகாரிகளின் அர்ப்பணிப்பு ஆகியவை நிர்வாகக் குழுவால் நேர்மறையாக பரிசீலிக்கப்பட்டன.

இதன்படி, ஒப்பந்தங்களுக்கு இணங்காத கொள்முதல்களுக்கு காரணமான அளவு செயல்திறன் அளவுகோல்களை பின்பற்றாதமைக்கு விலக்கு அளிக்க நிர்வாகக் குழு ஒப்புக்கொண்டது, மேலும்ாணுாணுாணு ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின் கீழ் கடமைகளை மீறியமை தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படாது என தீர்மானிக்கப்பட்டது,' என ஒகமுராவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இஸ்ரேலுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்றச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மானெல்லையைச் சேர்ந்த 21வயது இளைஞன் தெஹிவளையில் அமைந்துள்ள இஸ்ரேல் இனத்தவர்களுக்கு உரித்தான சபாட் கட்டடத்துக்கு அருகாமையில் நடந்து சென்றபோது, அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார் அவரை அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவரிடம் தேசிய அடையாள அட்டை இருக்கவில்லை என்பதற்காக கைதுசெய்து தெஹிவலை நீதிமன்றத்துக்கு ஆஜர்படுத்தி இருக்கிறனர். பின்னர் குறித்த இளைஞனின் வீட்டுக்கு இது தொடர்பாக தகவல்வழங்கியபோது, இளைஞனின் தந்தை தேசிய அடையாள அட்டையை கொண்டுவந்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உறுதிப்படுத்திய பின்னர் இளைஞன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு, தனது வீட்டை நோக்கிச் சென்றுள்ளார்.

என்றாலும் குறித்த இளைஞன் வீட்டுக்கு சென்றடைய முன்னர் அங்குவந்த தெஹிவலை பொலிஸார், அந்த இளைஞனின் சமூகவலைத் தளத்தலத்திலோ கையடக்க தொலை பேசியிலோ இஸ்ரேலுக்கு எதிரான வாசங்கள் இருப்பதாக தெரிவித்து, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அன்று இரவே கைதுசெய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

தெஹிவளை அல்விஸ் பிளேசில் அமைந்துள்ள இஸ்ரேல் இனத்தவர்களுக்கு சொந்தமான கட்டடம் மற்றும் கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள அவர்களின் நிலையம் தொடர்பில் பிரதமரிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, அந்த இரண்டு கட்டடங்களும் சட்டவிராரோதமானது என பதிலளித்தார். ஆனால் இந்த சட்டவிராரோத மத்திய நிலையத்துக்கு அருகாமையில் செல்லும்போதே நாட்டு பிரஜையான குறித்த இளைஞன் கைதுசெய்யப்படுகிறார். அப்படி எவ்வாறு முடியும்.? தேசிய அடையாள அட்டை இருக்கவில்லை என நாட்டு பிரஜையை கைது செய்கிறார்கள். ஆனால் சட்டவிரோத மத்திய நிலையத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குகிறார்கள். அதனால் ஆளும்தரப்பின் வெளிநாட்டு கொள்கை என்ன என ஜனாதிபதியிடம் கேட்கிறோம்.

அதேநேரம் அருகம்பை பிரதேசத்தில் இஸ்ரேல் இனத்தவர்கள் சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர் என்று ஆங்கில பத்திரிகை ஒன்று நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டிருந்தது. அதேபோன்று இவர்கள் எமது நாட்டில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் ஆளும்தரப்பு இதனை தடுத்து நிறுத்த, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பின்வாங்கி வருகிறது. ஆளும்தரப்பு யாருக்கு பயப்படுகிறது என்பதே எமக்குரிய கேள்வியாகும்.

ஆளும்தரப்பு கடந்த காலங்களில் பலஸ்தீனுக்காகச் செயற்பட்டுவந்த நடவடிக்கைகள் தற்போது நீர்த்துப்போயுள்ள. இஸ்ரேலுக்கு எதிரான படங்களை கையடக்கத் தொலைபேசியில் வைத்திருப்பவர்களை கைது செய்கிறார்கள். ஆனால் இஸ்ரேல் இனத்தவர்கள் நாட்டுக்குள் மேற்கொள்ளும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. ஆளும்தரப்புக்கு இவ்வாறு அழுத்தம் கொடுப்பது இஸ்ரேலா? அமெரிக்காவா?. ஆளும்தரப்பு இஸ்ரேல் பக்கம்தான் இருப்பதாக இருந்தால் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும்.

ஆனால் ஆளும்தரப்பு இஸ்ரேல், பலஸ்தீன் பிரச்சினையில் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருவதாகவே தெரிகிறது. பகலில் பலஸ்தீ னுக்கு ஆதரவாக இருப்பதுபோல் செயற்படுகின்றனர். இரவு நேரத்தில் இஸ்ரேலுடன் மறைமுக தொடர்புகளை வைத்துக்கொண்டு வருகிறது. இவ்வாறு இரட்டை நிலைப்பாட்டை ஆளும்தரப்பு கைவிட வேண்டும் என்றாா .

## வாக்குமூலம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

வலுசக்தி நிபுணரான விதுர ருலப்பனாவ என்பவரால் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் இதனை அறிவித்தார்.

இந்த மனு மீதான விசாரணை உயர்நீதிமன்ற நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜயரத்ன குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

தாம் சமூக வலைதளத்தில் பதிவிட்ட பதிவொன்று தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரி ஒருவர் தனக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டிருந்தார் என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிரான முறைப்பாடு என்ன என்பது தொடர்பிலும் அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பிலும் குறித்த பொலிஸாரிடம் தான் வினவிய தாகவும் தெரிவித்த மனுதாரர் அதற்கு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மறுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு தகவல் வழங்க மறுத்தமையூடாக பிரதிவாதிகளான பொலிஸ் அதிகாரிகள் தமது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் இந்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸ் மா அதிபர் தேசபந்துக்தென்னக்கோன் கணினி குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் இதற்கு முன்னர் மன்றில் முன்னிலையாகி வழங்கிய சமர்பணங்களுக்கு அமைய சுற்றுநிருபங்கள் தயாரிக்கப்பட்டு அவை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் மற்றுக்கு அறிவித்தார்.

இந்த அறிவிப்பு தொடர்பில் தாம் திருப்தி அடைவதாகவும் இதற்கமைய இந்த மனு தொடர்பிலான விசாரணைகளை நிறைவு செய்ய முடியும் என மனுதாரர் தரப்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். இதற்கமைய இந்த மனு மீதான விசாரணையை நிறைவுறுத்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அனுமதி வழங்கியது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் தேசபந்துக்தென்னக்கோன் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி விசாரணைப்பிரிவின் உபபொலிஸ்பரிசோதகர் மற்றும் அந்தப்பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

## அமைச்சரவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறோம். வகுப்பில் கதிரை உள்ளது. ஆனால் பாதுகாப்பு பிரதி அமைச்சரை காணவில்லை.

தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் மேடைகளில் இருந்தவர்கள் இன்று பாதுகாப்பு அமைச்சின் உயர் பதவிகளில் உள்ளார்கள். பாதுகாப்பு தொடர்பில் அடிப்படை தெளிவு இல்லாதவர்களால் எவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ள நிலையில் ஆளும்தரப்பு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. நிறைவடைந்த 6மாத காலப்பகுதியில் 34 பேர் துப்பாக்கிச்சூட்டால் உயிரிழந்துள்ளார்கள். இதில் சாதாரண பொதுமக்களும் உள்ளடங்குகிறார்கள். ஆனால் அனைத்து துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களையும் ஆளும்தரப்பு பாதாளக் குழுவின் கணக்கில் ஆளும்தரப்பு சேர்க்கிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் அடிப்படை தகைமையற்றவர்களை அரசுத் தலைவர் பதவி நீக்க வேண்டும். அதேபோன்று அமைச்சரவையையும் மறுசீரமைக்க வேண்டும். வாய்ச்சொல் வீரர்களை வைத்துக் கொண்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்றார்.

## சொற்ப ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2,170 ரூபா கட்டணம் 11 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய கட்டணம் 2,159 ரூபாவாகும்.

வருடாந்த பேருந்து கட்டண திருத்தங்களுக்கு அமைய 2.5 வீதத்தால் பேருந்து கட்டணத்தை குறைப்பதற்கு இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், அண்மையில் எரிபொருள் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பேருந்து கட்டணத்தை குறைக்கும் வீதம் மறுசீரமைக்கப்பட்டது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




சேர்ந்தெழுவோம் - 2
தமிழர் நிலங்களில் முதலீட்டு வாய்ப்புகள்
Investment opportunities in Tamil lands
மற்றும் இணையத்தள அறிமுகம்
காலம் : 05/07/2025 சனிக்கிழமை, பிற்பகல் 4.00
இடம் : Tilko Jaffna City Hotel

காலைக்கதிர் Kalaikkathir

# ராகமவில் கொல்லப்பட்டவர் 'ஆமி உபுல்'

கம்பஹா, ராகம பகுதியில் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் ஆமி உபுல் என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் மற்றும் கைக்குண்டு ஒன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆமி உபுல் கடந்த மே மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ராகமபொலிஸ்பிரிவுக்குட்பட்டபடுவத்த மாவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத தரப்பினரால் இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி ஒன்றில்வருகைதந்த அடையாளம்தெரியாத தரப்பினர் இந்தத்துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 45 வயதுடைய படுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ சிப்பாய் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

சந்தேகநபர்கள் கைத்துப்பாக்கி ஒன்றை இந்தக் கொலைக்குப் பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் "ஆமி உபுல்" என அழைக்கப்படும் உபுல் அமர ரஞ்சித் என்பவரே சம்பவத்தின்போதுசுட்டுக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஐஸ் போதைப்பொருள் மற்றும் கைக்குண்டு ஒன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்தஅவர் கடந்த மே மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆமி உபுல் என்பவர் "கனேமுல்ல சஞ்ஜீவ" மற்றும் "கொண்ட ரஞ்ஜீ" ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்த ஒருவர் எனவும் எனினும் இடைப்பட்ட காலப்பகுதியில் அவர்களிடமிருந்து விலகி தனித்து செயற்பட்டு வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புதிய கனேடிய தூதுவர் விரைவிலே நியமனம்

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷின் பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் முடிவுக்கு வரவுள்ள நிலையில், புதிய கனேடிய உயர்ஸ்தானிகராக இஸபெல் மார்ட்டின் நியமிக்கப்படவிருப்பதாக அந்நாட்டு ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

1996 ஆம் ஆண்டு கனடாவின் வெளிவிவகார மற்றும் சர்வதேசவர்த்தகத்திணைக்களத்தில்இணைந்துகொண்ட இஸபெல் மார்ட்டின், நீண்டகாலமாக இராஜதந்திர சேவையில் பணியாற்றிவருகிறார்.

கனடாவின் இராஜதந்திர சேவையின் பணிப்பாளராகவும் அச்செயன்முறைத்திட்டத்தின் பிரதித்தலைவராகவும் 2010 - 2013 ஆம் ஆண்டு வரை சேவையாற்றிய இஸபெல் மார்ட்டின், 2018 ஆம் ஆண்டு வரை கனேடிய பூகோள விவகாரங்கள் பிரிவில் தேசிய பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கான சிறப்பு ஆலோசகராகப் பணியாற்றினார்.

அதேபோன்று வெளிநாட்டு இராஜதந்திர சேவையைப் பொறுத்தமட்டில் 1998 - 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அவர் கைரோ, அபுதாபி மற்றும் லண்டன் ஆகிய நகரங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அதேவேளை 2018 - 2022 ஆம் ஆண்டு வரை இஸபெல் மார்ட்டின் கன்பராவில் பிரதி உயர்ஸ்தானிகராகவும், அரசியல் செயற்திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

கடந் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அவர் கனேடிய அரசாங்கத்தினால் கட்டாருக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார்.

லவல் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டபடிப்பையும், சர்வதேச கற்கைநெறிகளுக்கான குயின்ஸ்பேக் பட்டப்படிப்பு நிலையத்தில் சர்வதேச தொடர்புகளில் முதுமாணிப் பட்டப்படிப்பையும் பூர்த்திசெய்த இஸபெல் மார்ட்டின், தற்போது இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# விசாரணை ஆரம்பம்

கஹவத்தை பகுதியில் இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த தினம், நான்கு பேர் கொண்ட குழு ஒன்று வீட்டில் இருந்த இரண்டு இளைஞர்களை கடத்திச் சென்றதாகவும், பின்னர் அவர்களை பாழடைந்த பகுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்று துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதில், 22 வயது இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உயிரிழந்த இளைஞரின் இறுதிச் சடங்குகள் நேற்று (04) மாலை நடைபெற்ற நிலையில், அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதன்போது, நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயற்சித்தபோது, கிராமவாசிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதனைகட்டுப்படுத்துவதற்காகபொலிஸார்கண்ணீர் புகைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

பகுதியில்பாதுகாப்பைஉறுதிப்படுத்துவதற்காக 30க்கும் மேற்பட்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படை (ரீவீய்) அதிகாரிகள் பாதுகாப்பு பணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்தப் படுகொலை தொடர்பாக டுபாயில் உள்ள அமில என்ற நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகள்எழுப்பப்பட்டுள்ளநிலையில்,அவரது வீட்டிற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று (03) கிராமவாசிகளால் அமிலவின் வீட்டு முன்பு நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றும் மற்றும் முன்பு நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு மோட்டார்சைக்கிளும் எரித்து அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

மறைகாணி (சிசிரிவி) காட்சிகள் மற்றும் தொலைபேசி பதிவுகள் உள்ளிட்ட பல தகவல்களை ஆய்வு செய்து, சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

மேலும், இது தொடர்பாக இரண்டு நபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2025இல் வெளியிடப்பெற்றது